# தமிழ் வளர்ச்சிக்குழு

## எங்களைப்பற்றி

தமிழ்மொழி கற்றல் வளர்ச்சிக்குழு, கல்வி அமைச்சால் 2006-ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. அன்றுமுதல் இன்றுவரை, கடந்த 20 ஆண்டுகளாகப் பல சமூக அமைப்புகளுடன் இணைந்து தமிழ்மொழியின் வளர்ச்சிக்காகப் பலதரப்பட்ட நடவடிக்கைகளை ஏற்பாடு செய்துவந்துள்ளது. 2026-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம், இக்குழு, ‘தமிழ் வளர்ச்சிக்குழு’ எனப் பெயர் மாற்றம் கண்டுள்ளது. ‘தமிழ் வளர்ச்சிக்குழு’ என்னும் பெயர் மாற்றம், தமிழ்மொழியைச் சமூகத்தின் அனைத்துத் தரப்பினரிடமும் கொண்டு செல்லும் முதன்மை இலக்கைப் பிரதிபலிக்கிறது. மின்னிலக்கம், செயற்கை நுண்ணறிவு முதலிய புத்தாக்க முயற்சிகளைக்கொண்டு குறிப்பாக, இளையர்களை மொழியின்பால் ஈர்ப்பதுவே இக்குழுவின் இலக்காகும்.

## எங்கள் இலக்கு:

- சிங்கப்பூரில் தமிழ்மொழியை வாழும்மொழியாக நிலைபெறச் செய்தல்
- சமூக அமைப்புகளுடன் ஒன்றிணைந்து தமிழைக் கொண்டாடுதல்
- பெற்றோர்கள், இளைஞர்கள் ஆகியோரது பங்களிப்பை உறுதிசெய்தல்
- மின்னிலக்கத் தளங்கள், செயற்கை நுண்ணறிவு முதலிய புத்தாக்க முயற்சிகளைக்கொண்டு மொழியின்பால் ஈர்ப்பை ஏற்படுத்துதல்

**தமிழ் வளர்ச்சிக்குழு பற்றிய கூடுதல் தகவல்கள்:**

**எங்கள் திட்டங்கள்:**

## நாவில் தமிழ்
## நாளும் தமிழ்

# தமிழ் வளர்ச்சிக்குழு

## புதுச் சின்னம்

பின்னணியிலிருக்கும் ஆலமரம் நமது ஆழமான பண்பாட்டு வேர்களையும் மரபையும் குறிக்கிறது.

விரிந்துசெல்லும் கிளைகள் நமது முயற்சிகளையும் சமூக இணைப்பையும் பிரதிபலிக்கின்றன.

தங்க நிறத்தில் அமைந்துள்ள எழுத்துகள் தமிழின் வளமையையும் அதனைத் தொடர்ந்து நிலைநிறுத்தச் சமூகம் ஒன்றிணைந்து செயற்படும் தன்மையையும் குறிக்கின்றன.

சிவப்பு நிறம் துடிப்புமிக்க தமிழ்ச் சமூகத்தின் பண்பாட்டுப் பெருமித நிலையைக் குறிக்கிறது.

எங்களுடன் வந்து இணைந்திருங்கள்:

நாவில் தமிழ்
நாளும் தமிழ்

# முத்திரைத் திட்டங்கள்

## தமிழோடு இணைவோம்: அழகே! தமிழே!



இந்நிகழ்ச்சி தொடக்கநிலை வகுப்புகளில் பயிலும் தமிழ் பேசுவதற்குத் தயங்கும் மாணவர்களுக்கும் அவர்தம் பெற்றோர்களுக்காகவும் ஏற்பாடு செய்யப்படுகின்றது. தமிழ்மொழியை எளிதாகப் பயன்படுத்துவதற்கு ஏற்ற உத்திமுறைகளை அறிமுகஞ்செய்யும் நோக்கத்திலும் மகிழ்வூட்டும் நடவடிக்கைகளின்வழியே பெற்றோர்-பிள்ளை பிணைப்பை வலுப்படுத்தவும் இந்நிகழ்ச்சியில் பல முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

## பாலர் பள்ளித் தமிழாசிரியர்களுக்குரிய பயிலரங்கு





இப்பயிலரங்கில் பாலர் பள்ளித் தமிழாசிரியர்களுக்கு உகந்த பல்வேறு உத்திமுறைகள் பகிர்ந்துகொள்ளப்படுவது வழக்கம். இளம் பிள்ளைகளுக்கு மகிழ்வுறு கற்றல் அனுபவத்தை ஏற்படுத்தித் தரும் நோக்கில் அமையப்பெறும் இப்பயிலரங்கு, பிள்ளைகளின் கற்றல் தேவைகளுக்கு ஏற்ப வடிவமைக்கப்பட்டு வருகின்றது. ஒவ்வொரு ஆண்டும் பாலர் பள்ளித் தமிழாசிரியர்களுக்குரிய பயிலரங்கில், பல தனியார் பாலர் பள்ளி ஆசிரியர்களுடன் கல்வி அமைச்சின் பாலர் பள்ளித் தமிழாசிரியர்களும் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.



# உடனிணைவுத் திட்டங்கள்

## தமிழ்மொழி விழா







## தமிழோடு விளையாடு





## ஆஹா!
## இன்பமான கற்றல் பயணம்





தமிழ் வளர்ச்சிக் குழு

# உடனிணைவுத் திட்டங்கள்

## நல்லாசிரியர் விருது





## தாய்மொழிகளின் கருத்தரங்கு





## சிங்கப்பூர்த் தமிழ் இளையர் விழா





# நிதியாதரவுத் திட்டங்கள்


திருக்குறள் விழா


நானும் ஒரு படைப்பாளி - முத்தமிழ் விழா


பாவை சொல்லும் கதை


அறம் பேசும் அரங்கம்


சிங்கப்பூர்த் தமிழ் இளையர் மாநாடு


மின்வழித் தமிழ்மொழி


வாழும் கதை


திருவிழாக் கொண்டாட்டம்


பார்வை


செயற்கை நுண்ணறிவுவழித் தமிழ் வரைகதை உருவாக்குதல்


தோல் சங்க நாதம் – நானும் ஒரு படைப்பாளி


சொற்களம்


விதைகள்


அக்னி


யுத்தம்

## நாவில் தமிழ்
## நாளும் தமிழ்